நாணயங்கள்

தொகுப்பாசிரியர்

டாக்டர் வே. ஜெயராஜ், எம்.,எஸ்ஸி., எம்.ஏ., பிஎச்.டி.
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
வேலூர்-632 004

வெளியீட்டு நாள் : 27.5-1992

500 பிரதிகள்

இலவச வெளியீடு

நாணயங்கள்

பண்டமாற்று முறையைத் தவிர்க்க கி. மு. 8-ஆம் நூற்றாண்டளவில் நாணயங்கள் நடைமுறைக்கு வந்தன. நாணயங்கள் மூலமாக வரலாறு, காலம், ஆட்சிமுறை, வணிகம், செல்வச்சிறப்பு, தொழில் நுட்பம், கலை, பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் அறிவியல் 'நாணயவியல், (Numismatics) ஆகும்.

பண்டைய காலத்தில் பணத்தைச் சேமித்து வைக்க இக்காலத்திலுள்ளவை போன்ற வங்கிகள் (BANKS) இல்லாமையால் பாதுகாப்பிற்காக பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்ட நாணயங்களே இன்று பல்வேறு வகைகளில் பூமியிலிருந்து புதையலாகக் கிடைக்கின்றன. புதையலாகக் கிடைக்கும் நூறு ஆண்டுகளுக்கு முந்திய அரும்பொருட்கள் (ANTIQUITIES) இந்திய புதையல் சட்டத்தின் படி (INDIAN TREASURE TROVE ACT) அரசுக்குச் சொந்தமானது. புதையல் கண்டுபிடிப்போருக்கும் நிலச்சொந்தக்காரருக்கும் நஷ்டஈடு வழங்கப்படும். புதையலைக் கண்டுபிடிப்போர் உடனடியாக வருவாய்த்துறையினருடன் தொடர்பு கொண்டு அரும்பொருட்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

தங்கம், வெள்ளி, எலக்ட்ரம், பிலான், போடின், ஸ்ட்ரேட்டர், வெண்கலம், பித்தளை, செம்பு, ஈயம், நிக்கல், போன்ற உலோகங்கள் மற்றும் அவற்றின் கூட்டுப்பொருட்களினால் நாணயங்கள் உருவாக்கப்பட்டன. கி. மு. 680-இல் வாழ்ந்த வணிகர் ஒருவர் தம் முத்திரையைப் பதித்து வெளியிட்டதே முதல் அச்சு நாணயமாகும். இந்தியாவில், கிடைத்துள்ள புராணாக்காசுகள் அல்லது பழஞ்சலாகை அச்சுகள் (Punch Marked Coins) என்பவை மிகப் பழமையானதாகும்.

பழங்கால நாணயங்கள் செவ்வகம், சதுரம், வட்டம் மற்றும், ஒழுங்கற்ற வட்டம் ஆகிய வடிவங்களில் அமைந்திருந்தன. நாணயங்களை "வார்த்தல்" முறையிலும், "அடித்தல்" முறையிலும் உருவாக்கினர். நாணயங்கள் செய்யப்பட்ட இடம் அக்கசாலை, தங்கசாலை, கம்பட்டம் என்னும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டன.

உரோமானியக்காசுகள் :

தமிழகத்தில் பொன், வெள்ளியாலான உரோமானியக்காசுகள் (வெருசஸ், அகஸ்டஸ், டைபீரியஸ்) மற்றும் செம்பு, வெங்கலம் பித்தளைக்காசுகள் புதையலாகவும் ஆற்றங்கரைகளிலும் கிடைத்துள்ளன.

புராணாக்காசுகள் : [கி மு .4-00]

மௌரியர் கால அச்சுகுத்திய புராணாக்காசுகள் தமிழகத்தின் தொன்மையான நகரங்கள் பலவற்றில் கிடைத்துள்ளன. சங்கால சேரர், சோழர். பாண்டியர் செப்புக் காசுகள்[சதுரம், செவ்வகம்] குலமரபுச்சின்னங்களுடனும் சிலவற்றில் ' பிராமி, எழுத்தில் பெயர் பொறிப்புகளுடனும் கிடைத்துள்ளன.

பல்லவர் காசுகள் [கி.பி. 200-900]

முகப்பில் காளையும் மறுபுறத்தில் மரம், கப்பல், நட்சத்திரம் நண்டு அல்லது மீன் பொறிக்கப்பட்ட முற்கால பல்லவர்களின் கி. பி. 200- 400] நாணயங்கள் காஞ்சிபுரத்தில் கிடைத்துள்ளன. செம்பு, ஈயம், ஆகியவற்றாலான நாணயங்களை வெளியிட்டனர்.

கங்கர் காசுகள் : (கி. பி. 900-1000)

3 முதல் 5 கிராம் எடையுள்ளதும், முகப்பில் யானையும் பின்புறம் குவளைமலர் மாலையும் கொண்ட கங்கர் காசுகள் புதையலாகக் கிடைத்துள்ளன.

கொங்குச் சேரர் காசுகள்: [கி. பி. 900- 1000]

60க்கும் மேற்பட்ட உருவங்களைக் கொண்ட (யானை, பனை, பரசு, சங்கு, விஷ்ணுபாதம்) கொங்குச் சேரர்களின் செம்பாலான காசுகள் கிடைத்துள்ளன.

சோழர் காசுகள்[கி. பி. 980-1263]

இராஜ ராஜனால் வெளியிடப்பட்ட "ராஜ ராஜ" என்ற தேவநாகரி" எழுத்தமைதியைக் கொண்ட நான்கு வகையான

வெள்ளிக் காசுகளும், தங்கக்காசுகளும், செம்புக் காசுகளும் கிடைத்துள்ளன. உத்தம சோழன் முதலாம் இராஜேந்திரன், முதலாம் ராஜாதி ராஜன், குலோத்துங்கன் ஆகியோரது நாணயங்களும் கிடைத்துள்ளன.

பாண்டியர் காசுகள் : (கி. பி. 1235- 1265)

"சுந்தர" "சுந்தர பாண்டியன்" என்னும் தமிழ்ப்பொறிப்புடைய செம்புக்காசுகள் மீன் இலட்சினையுடனும் [SYMBOL] சங்கு, சக்கரத்துடனும் கிடைத்துள்ளன.

விஜயநகர் அரசுக்காசுகள் : (கி. பி. 1375-1530)

காளை, கருடன், யானை, உமாமகேசுவரர், இலக்குமி நாராயணன். கிருட்டிணன், யோக நரசிம்மர்,சங்கு சக்கரம பொறிக்கப்பட்ட கால், அரை, ஒரு வராகன்களை விஜயநகர் அரசர்கள் வெளியிட்டுள்ளனர். நாகரி மற்றும் தெலுங்கு எழுத்துகளில் அரசர்களுடைய பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

மைசூர் சுல்தான்களின் காசுகள் : (கி. பி. 1761-1799)

ஐதர் அலியும், திப்பு சுல்தானும் சிவன்–பார்வதி, யானை உருவங்கள் பொறிக்கப்பட்ட காசுகளை, பெங்களூர் ஸ்ரீரங்கபட்டினம் போன்ற இடங்களிலிருந்து அச்சிட்டு வெளியிட்டனர்.

மைசூர் உடையார் நாணயங்கள் : [கி. பி. 1799-1868]

திப்பு இறந்தபின் உடையார் ஆட்சி திரும்பவும் உயிர்த்தது. ஒருபுறம் அரசனின் பெயர் சமஸ்கிருதத்திலும் மறுபுறம் சிவன் பார்வதி உருவங்களும் பொறிக்கப்பட்ட பொன் வராகன்களும், வெள்ளி பணங்களும் வெளியிடப்பட்டன. செப்பு நாணயங்களில் யானைக்குப் பதிலாக சிங்கம் பொறிக்கப்பட்டது.

இந்தோ- ஐரோப்பிய நாணயங்கள்

போர்ச்சுகிசியர் [PORTUGUESE] : [கி.பி. 1600-1800]

பொன், வெள்ளி, செம்பு, துத்தநாகம் ஆகிய உலோகங்களில்

போர்ச்சுகீசிய பட்டயம் ஒருபுறமும் சிலுவை மறுபுறமும் அமைந்த நாணயங்களை கோவா, டையு, நாணயச்சாலைகளிலிருந்து அச்சிட்டு வெளியிட்டனர்.

டேனியர் [DANISH]: (கி.பி. 1612- 1845)

மூன்றாம், நான்காம், ஐந்தாம் பிரடரிக் மன்னர்கள்; ஐந்தாம், ஆறாம் கிறிஸ்டியன் மன்னர்கள் தரங்கம் பாடியிலிருந்து அவர்களது முதல் எழுத்து பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர். ஐந்தாம் கிறிஸ்டியன் கூட்டுஎழுத்தோடுஆண்டுகளையும் பொறித்து [C5] வெள்ளி, ஈயம். செம்பு, துத்தநாகம் ஆகிய உலோக நாணயங்களை வெளியிட்டார்.

டச்சுக்காரர் [DUTCH] : (கி.பி. 1730- 1830)

நாகூர் சல்லிகள் எனப்பட்ட வி.ஓ. சி. [VOC] என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட செம்பு, வெள்ளி, ஈயம், துத்தநாகம் ஆகிய உலோகநாணயங்களை நாகப்பட்டினம், 'பழவேற்காடு ஆகிய இடங்களிலிருந்து வெளியிட்டனர். வி.ஓ.சி. [VOC] என்பதற்கு [the Vereenigde Oost-Indiche compagnie) "United East India Company" என்று பொருள் திருமாலின் உருவம் பொறிக்கப்பட்ட பொன் வராகன்களையும் வெளியிட்டனர்.

பிரஞ்சுக்காரர் (FRENCH) : [கி. பி. 1700- 1836]

முகப்பில் சேவல், பின்புறம் பூவிதழ், புதுச்சேரி என்ற பொறிப்புடன் கூடிய துட்டு, அரைத்துட்டு, ஆண்டு பொறிக்கப்பட்ட செம்புக்காசு; முகப்பில் திருமால்-தேவி, பின்புறம் பிறைச்சந்திரன் பொறிக்கப்பட்ட, பூவிதழ், சேவல்பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் ஆகியவற்றை புதுச்சேரியிலிருந்து வெளியிட்டனர்.

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி : [கி. பி. 1661- 1816]

திருமால் அல்லது திருமால் தேவியருடன் கூடிய உருவங்கள் பொறிக்கப்பட்ட (பொன்) நட்சத்திரபகோடாக்களையும் 1808-11 ஆண்டுகளில் சென்னை தங்கச் சாலையிலிருந்து 5,2,1, பண நாணயங்களையும், 1, 1/2.1/4 ரூபாய் நாணயங்களையும் 1/2, 1/4 பூவராகன் வெள்ளி ரூபாய்களையும் வெளியிட்டனர், விக்டோரியா ற

விக்டோரியா பேரரசி, ஏழாம் எட்வர்டு, ஐந்தாம், ஆறாம் ஜார்ஜ் பேரரசர்கள் ஆகியோரின் தலை ஒருபுறம் இந்தியா என்ற பெயர் மறுபுறம் பொறிக்கப்பட்ட ரூபாய்களையும் 1/2, ரூபாய் 1/4, ரூபாய் 2 அணா, 1 அணா, 1/2 அணா, 1/4, அணா மற்றும் பைசாக் களையும், வெளியிட்டனர்

வட ஆர்க்காடு

வடஆர்க்காடு பல்லவர், சேரர், சோழர், பாண்டியர், ஒய்சாளர் விஜய நகர பேரரசர்கள், நாயக்கர்கள், பாமினி, சுல்தான்கள், மைசூர் சுல்தான்கள், பீஜப்பூர் சுல்தான்கள், மராத்தியர்கள், மைசூர் உடையார்கள், ஆர்க்காடு நவீப்புகள், ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்கள், ஆகியோர் ஆட்சி செய்த பகுதியாகும். பல்வேறு வகையான நாணயங்கள் புதையலாகவும் ஆற்றோர அரிப்புகளிலும் கிடைக்கின்றன. திருவண்ணாமலைசம்புவராயர் மாவட்டம்செங்கம்வட்டத்திலுள்ள ஆண்டிப் பட்டியில் புதையலாகக் கிடைத்த143 பாண்டியர்கால ஈயநாணயங் கள் தமிழகத்தின் நாணய வியலில் புதிய அத்தியாயத்தை உருவாக் கியுள்ளன. இதில் ஒருபுறம் "அதின்னன் எதிரன் சேந்தன்,, என்ற பிராமி வாசகம் அமைந்துள்ளது. சோழர், ஹைதர், திப்பு, மைசூர் உடையார்கள், விஜயநகர் அரசர்கள், நவாப்புகள், ஆங்கிலேயர், டச்சுக்காரர் ஆகியோரின் நாணயங்களும் தென்னிந்திய பணம் எனப்படும் பொற்காசுகளும் அதிக அளவில் கிடைக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை செம்பு, பிற தங்கமும் வெள்ளியாகும்.

இந்திய புதையல் சட்டத்தின் கீழ் கி. பி. 1947 முதல்

1992 வரையில் வட ஆர்க்காடு அம்பேத்கர்மற்றும்திருவண்ணா மலை சம்புவராயர் மாவட்டங்களிலிருந்து ஏழுநூறுக்கு மேலான பொன், வெள்ளி செம்பு நாணயங்கள் சென்னை அரசு அருகாட்சி யகத்தில் பெறப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றன.

வ. எண்	ஆண்டு	புதையல் கிடைத்த இடம்	வட்டம் மாவட்டம்	நாணய வகை	கிடைத்த நாணயங்கள்
1.	1960	ஆண்டிப்பட்டி	செங்கம், தி.ச மாவட்டம்	விக்டோரியா	38
2,	1967	,,	,,	பாண்டியர் (ஈயம்)	143
3.	1974	திருப்பத்தூர்	வ. ஆ. அ மாவட்டம்	தென்னிந்திய பணம்(பொன்)	7
4.	1976	அரக்கோணம்	,,	,,	69
5.	1976	வந்தவாசி	தி.ச. மாவட்டம்	,,	29
6.	1984	அரக்கோணம்	வ ஆ.அ மா வட்டம்	ஆங்கிலேயர்	1
7.	1985	போளூர்	தி ச. மா வ	தெ. இந்திய பணம் [பொன்]	19
8.	1985	செங்கம்	,,	ஆங்கிலேயர்	31
9.	1986	குடியேற்றம்	வ.ஆ.அ. மா வ.	தெ.இந்திய பணம் [பொன்]	300
10,	1990	தி.மலை	தி.ச.மா.வ.	,,	10
11,	1990	வாணியம்பாடி	வ.ஆ.மாவட்டம்	ஆங்கிலேயர்	4
12,	1991	,,	,,	,,	17
13,	1991	கேளூர்	போளூர், தி.ச.	நவாப்	2
14,	1992	தி.மலை	தி.ச.மாவட்டம்	ஆங்கிலேயர்	49

வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் நாணயங்கள்

வேலூர் அரசு அருங்காட்சியகம் வேலூர் இலட்சுமணசாமிடவுன் ஹாலில் 1985-ஆம் ஆணடு செப்டம்பர் திங்கள் 6-ம் நாள் தொடங்கப்பட்டது. தொல்பொருளியல் [Archaeology], மானிடவியல் [Anthropology], ஓவியங்கள் (Painting), கைவினைப் பொருட்கள் [Handicrafts], தாவரவியல் [Botany], விலங்கியல் (Zoology) மற்றும் புவியியல் [Geology] பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. 32 வகையான இந்திய நாணயங்களின் உலோக மாதிரிகள் காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன

புராணாக்காசு [வெள்ளி]	— சுமார் கி.மு. 400
இந்திய கிரேக்கம் [வெள்ளி]	— கி.மு. 160-140
குஷானர்-கனிஷ்கர் [செம்பு]	— சுமார் கி.பி. 100
குஷானர்-வாசுதேவர் [பொன்]	— சுமார் கி.பி. 200
சாதவாகனர்-சாதகர்ணி [ஈயம்]	— கி.பி. 155-164
குப்தர்-முதலாம் சந்திரகுப்தர் [பொன்]	— கி.பி. 320-326
குப்தர்-சமுத்திர குப்தர் [பொன்]	— கி.பி. 326-375
குப்தர்-II சந்த்ரகுப்தர் [பொன்]	— கி.பி. 375-431
மேற்கு சத்ரபர்-ருத்திரசேனர் [போடின்]	— சுமார் கி.பி. 300
வர்தனா-ஹர்ஷவர்தனா [செம்பு]	— கி.பி. 606-648
இராசபுத்திரர்-பிரிதிவிராஜ் [செம்பு]	— கி.பி. 1175-119-
மேற்குசாளுக்கியர்-ஜெகதேகமல்லா [பொன்]	— கி.பி. 1018-1042
இராஜ ராஜசோழர் [பொன்]	— கி.பி. 980-1044
இராஜேந்திர சோழர் (வெள்ளி)	— கி.பி. 1070-1120
தனஞ்செய பாண்டியன் [பொன்]	—
வீரகேரளர் [செம்பு]	— சுமார் கி.பி. 1127
டில்லி சுல்தான்-அலாவுதின் மூகமதுஷா [பொன்]	— கி.பி. 1296-1316
டில்லி சுல்தான் ஷெர்ஷா [செம்பு]	— கி.பி. 1540-1545
விஜயநகர் கிருஷ்ணதேவராயர் [செம்பு]	— கி.பி. 1509-1530
மொகலாயர்-அகபர் [பொன்]	— கி.பி. 1556-1605
மொகலாயர்-ஜஹாங்கீர் [பொன்]	— கி.பி. 1605-1627
மைசூர் சுல்தான்-ஐதர் அலி [செம்பு]	— கி.பி. 1774-1782
மைசூர் சுல்தான்-திப்பு சுல்தான் [செம்பு]	— கி.பி. 1782-1799
கிருஷ்ணராஜ உடையார் [செம்பு]	— கி.பி. 1779-1868
ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி	
மூன்று சாமி பகோடா [செம்பு]	— கி.பி. 1700
ஒரு மொஹர் [செம்பு]	— கி.பி. 1700
அரைவெள்ளி பகோடா [வெள்ளி]	— கி.பி. 1816

நாணயவியல் கண்காட்சி [மே 27, 28, 1992]

நாணயவியல் கண்காட்சியின் போது கீழ்க்கண்ட நாணயங்களை வேலூர் அரசு அருங்காட்சியகம் காட்சியில் வைத்தது.

வ.எண்	பதிவு எண்.	வகை.	குறிப்பு	காலம்
1.	N, 165/92	அச்சுக்குத்தியது (செம்பு)		கி.மு. 200
2.	N. 157/92	சங்க காலச் சேரர் (செம்பு)	யானை	கி.மு. 200
3.	N 162/92	சங்க காலச் சோழர் (செம்பு)	மனிதரைத் தாங்கிய யானை	கி பி 200
4.	N 163/92	சங்க கால பாண்டியர் (செம்பு)		கி.பி. 200
5.	N 167/92	மலையமான் காரி [செம்பு]		கி.பி. 900
6.	N 166/92	சாதவாகனர் [ஈயம்]		கி.பி. 200
7.	N 171/92	சுந்தர பாண்டியன்		கி.மு. 1300
8.	N 132/92	ரகுநாத நாயக்கர்		கி.பி. 1300
9.	N 130/92	மதுரை நாயக்கர்		கி.பி. 1600-30
10.	N 234/92	விஜய நகரப் பேரரசு	வலப் புறம் பார்க்கும் காளை	கி.பி. 1600
11.	N 286/92	,,	வலப்புறம் பார்க்கும் யானை	கி.பி. 1375-1530
12.	N 231/92	,,	இடப் புறம் பார்க்கும் யானை	,,
13.	N 232/92	,,	படுத்திருக்கும் காளை	,,
14.	N 233/92	,,	குதிரை	,,
15.	N. 168/92	திப்புசுல்தான்	யானை	கி. பி. 1726-1790
16.	N. 244/92	மைசூர் உடையார்	இடப் புறம் பார்க்கும் யானை	கி.பி. 1799-1868
17.	N. 124/91	புதுக்கோட்டை அம்மன் காசு	இலக்குமி	கி.பி. 1800
18	N.170/92	இந்தோ டேனியர் ஏழாம கிறிஸ்டியன்	C7/DAC	கி.பி. 1784
19.	N.170/92	இந்தோ டேனியர் ஏழாம் கிறிஸ்டியன்	C/7 KAS	கி.பி.1830

20.	N. 204/92	இந்தோ-டச்சு		கி.பி. 1800
21.	N. 203/92	இந்தோடச்சு	தராசு	கி.பி. 1819
22.	N ~~175~~ 151/92	இந்தோடச்சு வி. ஒ. சி. [பிரீஸ்லாண்டவகை]		கி.பி. 1734
23.	N. 175/92	~~[பிரீஸ்லாண்டவகை]~~ வி. ஒ. சி [சீலாண்ட் வகை]		கி.பி. 1780
24.	N. 205/92	இந்தோ பிரஞ்சு புதுச்சேரி	பூவிதழ்	கி.பி. 1800
25.	N. 48/90	இந்தோ-பிரிட்டீசு கிழக்கிந்திய கம்பெனி	—பத்து-கேஷ்	கி.பி. 1808
26.	N. 178/92	இந்தோ-பிரிட்டீசு கிழக்கிந்திய கம்பெனி	இருபது கேஷ்	கி.பி. 1808
27.	N. 180/92	இந்தோ-பிரிட்டீசு கிழக்கிந்திய கம்பெனி	1/2 அணா —	கி.பி. 1838
28.	N. 66/90	இந்தோ-பிரிட்டீசு	1/4 அணா —	கி.பி. 1835
29.	N. 112/91	இந்தோ-பிரிட்டீசு கிழக்கிந்திய கம்பெனி	1/4 அணா —	கி.பி. 1138
30.	N. 69/90	இந்தோ-பிரிட்டீசு கிழக்கிந்திய- கம்பெனி	1/2 அணா —	கி.பி. 1835
31.	N. 154/92	விக்டோரியா அரசி கிழக்கிந்திய கம்பெனி	1/2 அணா —	கி.பி. 1862
32.	N 183/92	விக்டோரியா அரசி	1/4 அணா	கி.பி. 1870
33.	N. 113/91	விக்டோரியா அரசி	1/2பைசா	கி.பி. 1862
34.	N. 114/91	விக்டோரியா அரிசி	1/4 பைசா	கி.பி. 1870
35.	N.195 1/92	விக்டோரியா அரசி	1/2 அணா	கி.பி. 1862
36.	N. 67/90	விக்டோரியா பேரரசி	1/4 அணா	கி.பி. 1897
37.	N 39/88	விக்டோரியா பேரரசி	1/ அணா —	கி.பி. 1889
38	N. 185/92	ஏழாம் எட்வர்டு பேரரசர்	1/4 அணா	கி.பி. 1904
39.	N. 70/90	ஏழாம் எட்வாடு பேரரசர்	1/12 அணா	கி.பி. 1906
40.	N. 40/88	ஏழாம் எட்வர்டு பேரரசர்	1/12 அணா	கி.பி. 1934
41.	N. 50/90	ஐந்தாம் ஜார்ஜ் பேரரசர்	4 அணா	கி.பி. 1920

42.	N. 81/90	ஐந்தாம் ஜார்ஜ் பேரரசர்	1 அணா	கி.பி.1936
43.	N. 68/90	ஐந்தாம் ஜார்ஜ் பேரரசர்	1/4 அணா	கி.பி.1934
44.	N.156 /92	ஆறாம் ஜார்ஜ் பேரரசர்	1 ரூபாய்	கி.பி.1942
45.	N.53/90	ஆறாம் ஜார்ஜ் பேரரசர்	1/2 ரூபாய்	கி.பி.1941
46.	N. 152/92	ஆறாம் ஜார்ஜ் பேரரசர்	1/4 ரூபாய்	கி.பி.1942
47.	N. 82/90	ஆறாம் ஜார்ஜ்	2 அணா	கி.பி.1944
48.	N 72/90	ஆறாம் ஜார்ஜ்	1 அணா	கி.பி. 1940
49.	N, 155/92	ஆறாம்ஜார்ஜ்	1/2 அணா	கி.பி 1946
50.	N. 57/90	ஆறாம்ஜார்ஜ் பேரரசர்	1/4 அணா	கி.பி. 1945

வேலூர் அரசு அருங்காட்சியகம் குறித்து தகவல்கள்

தொடக்கம்	:	6-9-1985.
தன்மை	:	பல்நோக்கு அருங்காட்சியகம்
பணிநேரம்	:	தினமும் காலை 9-00 முதல் மாலை 5-00 மணிவரை.
விடுமுறைநாட்கள்	:	வெள்ளி, இரண்டாம் சனி, மற்றும் குடியரசு நாள், சுதந்திரநாள், காந்திபிறந்த நாள்.
அனுமதிக் கட்டணம்	:	இல்லை.
தொடர்பு முகவரி	:	காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்-632 004.

நூல் ஏற்பாதரவு
இந்தியன் வங்கி,
சென்னை.

Sponsored by
Indian Bank
Madras.